# குண்டுவீச்சிற்கு 400 ஈராக்கியர்; 40 ஜோர்டானியர் பலி!

(பக்தாத்)

பாரசீக வளைகுடாப் போரின் 28ஆம் நாளான நேற்று அதிகாலை பன்னாட்டுப் படை விமானங்கள் ஈராக்கிய குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் இரண்டு ஏவுகணைகள் பதுங்குகுழி ஒன்றை நேரடியாகத் தாக்கியதில் சுமார் 400 பேர்வரை கொல்லப்பட்டுள்ளார்கள். பதுங்குகுழியின் நுழைவாசலிலேயே ஏவுகணைகள் விழுந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இடிபாடுகளிடையே இருந்து இறந்தவர்களை மீட்டெடுக்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. கருகிய நிலையில் நூற்றுக் கணக்கான உடல்கள் நேற்று இரவுவரை எடுக்கப்பட்டதாகவும், காயத்தோடு உயிர்பிழைத்த எட்டுப்பேர் மீட்கப்பட்டதாகவும் ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர். ஏ.ஜெ.ன்ஸ் செய்திகளும் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளன. பலர் இடிபாடுகளிடையே புதை

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: ௮ விலை ரூபா: ௨-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நினசரி PEOPLES DAILY

நாதம்: 01 பெப்ரவரி (14 - 02 - 1991) வியாழக்கிழமை ஒலி: 361

## வடக்கு கிழக்குப் பகுதியில் ஜனசவியவிற்குத் தடை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் வழமையான வழ்க்கை நிலைமைகள் சீர்குலைந்த பகுதிகளில் ஜனசக்தித் திட்டத்தை மேற்கொள்ளவேண்டாம் என வடக்குக் கிழக்கு அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்திருப்பதாக ஜனசக்தித்திட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்தப் பகுதி வாழும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விமான, கடற்படை உதவியுடன்

# இராணுவம் - புலிகள் முல்லையில் கடும் மோதல்

## மேஜர் ஜோன்சன் வீரமரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் இரண்டாவது நாளாக மோதல் இடம்பெற்று வருகின்றது. இந்தப் போரில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு விமானப்படையும், கடற்படையும் துணையாக குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதலும் மேற்கொண்டுள்ளன. நேற்று நடந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் மேஜர் ஜோன்சன் வீரமரணமடைந்தார். இராணுவ தரப்பில் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சேதவிபரம் தெரியவில்லை.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் முல்லைத்தீவு முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலால் தடுத்து நிறுத்தப்பட்டபோதும் தொடர்ந்தும் தமது முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் முன்னேற்றத்திற்கு விமானப் படை விமானங்களும், கடற்படை பீரங்கிப் படகுகளும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை புலிகள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனை சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்ததாக அறிவிக்க ஏஜென்சி செய்திகள் எண்ணிக்கையை வெளியிட அதிகாரி

### முல்லையில் பரவலான விமானக் குண்டுவீச்சு

## வீரவணக்கம்

### "சுரேஸ்"

### "கமல்ராஜ்"

நேற்று முன்தினம் முல்லைத் தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணம் அடைந்த இரு போராளிகளின் விபரம் வருமாறு:

சுரேஸ் (சிவானந்தன், முல்லைத்தீவு), கமல்ராஜ் (தீர்த்தக்கரை, முல்லைத்தீவு)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்

## புல்மோட்டையில் கண்ணிவெடி ஐந்து இராணுவம் பலி

(கொழும்பு)

புல்மோட்டை வீதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் வந்த கவச வாகனமொன்றை கண்ணி வெடி மூலம் விடுதலைப் புலிகள் தகர்த்ததாக இந்திய வானொலி அறிவித்தது. அந்த வாகனத்தில் இருந்த ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## நெலுக்குளத்தில் இராணுவத்தை இடைமறித்துப் புலிகள் தாக்கு

(வவுனியா)

வவுனியா இராணுவத்தினரும் புலிகளும் நேற்று நெலுக்குள பகுதியில் மோதிக்கொண்டனர்.

தாண்டிக்குளம் பகுதிக்கும் சாஸ்திரிகூளாங்குளம் பகுதிக்கும் இடையிலிருந்து ஒருமைல் தூரத்தில் உள்ள புதிய வீதியான மன்னார் வீதியில் நெலுக்குளம் என்னும் இடத்திற்கு தாண்டிக்குளம் இராணுவத்தினர் வந்தனர். இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை வவுனியா நகரிலிருந்து இராணுவத்தினர் இவர்களுடன் வந்து ஒன்று சேர்ந்து கொண்டனர். மாலை இரண்டு மணியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசாவின் வருகை ஒட்டி நீலாவணையில் 400 பேர் கைது

(மட்டக்களப்பு)

கோட்டைக்கல்லாறு தேத்தாத்தீவை வரை செய்து கொண்டிருந்த நானூறு பேர் வரையான இளைஞர்களை நீலாவணை எனும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டனர்.

கடந்த 12ஆம் திகதி காலை ஒன்பது மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. நாளை 15ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மட்டக்களப்புக்கு வர இருப்பதை ஒட்டியே இக்கைது இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

## தரிசாக விடப்படும் நிலங்களை பகிர்ந்தளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பெரும்போக நெல் விதைப்பின் பின் தரிசாக விடப்படும் பயிர்ச் முடிவுற்றதும் அணைத்து வயல் நிலங்களிலும் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள

# மேஜர் ஜோன்சன் வீரமரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றும் இரண்டாவது நாளாக மோதல் இடம்பெற்று வருகின்றது. இந்தப் போரில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு விமானப்படையும், கடற்படையும் துணையாக குண்டுவீச்சும், பீரங்கித் தாக்குதலும் மேற்கொண்டுள்ளன. நேற்று நடந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் மேஜர் ஜோன்சன் வீரமரணமடைந்தார். இராணுவத் தரப்பில் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சேதவிபரம் தெரியவில்லை.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் முல்லைத்தீவு முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலால் தடுத்து நிறுத்தப்பட்டபோதும் தொடர்ந்தும் தமது முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் இவர்களின் முன்னேற்றத்திற்கு விமானப்படை விமானங்களும், கடற்படை பீரங்கிப் படகுகளும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை புலிகள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனை சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் உறுதிசெய்ததாக அறிவித்த ஒரு சில செய்திகள் எண்ணிக்கையை வெளியிட அதிகாரிகள் மறுத்து விட்டதாகத் தெரிவித்தது.

புலிகள் தரப்பில் மேஜர் ஜோன்சன் வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## முல்லையில் பரவலான விமானக் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சிக்கு ஆதரவாக கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

நேற்றுக்காலை ஆறு மணியளவில் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் மூன்றாம் கட்டைப் பகுதியில் குண்டுகளை வீசின. இதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர்களின் தாக்குதலும் இடம்பெற்றது இரண்டு ஹெலிகொப்டர்கள் 'ரொக்கட்' வீசியும், கலிபர் வேட்டுகளையும் தீர்த்தன.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

ரே·ந்து சென்ற உகணை

## மேஜர் ஜோன்சன் பற்றிய சில குறிப்புக்கள்

(நமது நிருபர்)

முல்லையில் வீரமரணம் அடைந்த மேஜர் ஜோன்சன் பற்றிய சில குறிப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவர் 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ்மீது திடீர் தாக்குதல்; 4பேர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

உகணைப் பொலிஸ் நிலையத்திலிருந்து வக்கியெல்ல பொலிஸ் நிலையத்துக்கு சென்றுகொண்டிருந்த பொலிஸார் மீது திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த 12ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் கோணாகலை என்னும் இடத்தில் இடம்பெற்றது. இதில்;

★ 84-எஸ் ரக துப்பாக்கி - 3
★ அதற்கான மகசீன்கள் - 3
★ 5.56 ரக ரவைகள் -75

ஆகியன கைப்பற்றப்பட்டன.

## வீரவணக்கம்

"சுரேஸ்"

"கமல்ராஜ்"

நேற்று முன்தினம் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணம் அடைந்த இரு போராளிகளின் விபரம் வருமாறு:

சுரேஸ் (சிலாவத்தை, முல்லைத்தீவு), கமல்ராஜ் (தீர்த்தக்கரை, முல்லைத்தீவு)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்

## பர்னாலா பதவி இராஜினாமா

(டில்லி)

தமிழ்நாடு ஆளுநர் எஸ். எஸ் பர்னாலா நேற்றுத் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுள்ளார். விஸ்வநாராயண் ஸிங் தமிழ்நாட்டுப் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று ராஷ்டிரபதி பவன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கி இளைஞர் பலி

(சே. தமை.)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலின்போது அச்சுவேலி - வலலாய் பகுதியைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை கர்ணன் (26 வயது) என்பவர் படுகாயமடைந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

...இலையிலிருந்து ஒருமைல் தூரத்தில் உள்ள புதிய வீதியான மன்னார் வீதியில் நெலுக்குளம் என்னும் இடத்... ணுவத்தினர் இவர்களுடன் வந்து ஒன்று சேர்ந்து நின்றனர். மாலை இரண்டுமணியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசாவின் வருகை ஒட்டி நீலாவணையில் 400பேர் கைது

(மட்டக்களப்பு)

கோட்டைக்கல்லாறு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த நானூறுபேர் வரையான பயணிகளை நீலவணை எனும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டனர்.

கடந்த 12ஆம் திகதி காலை ஒன்பது மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. நாளை 15ஆம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மட்டக்களப்புக்கு வர இருப்பதை ஒட்டியே இக்கைது இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

## தரிசாக விடப்படும் நிலங்களை பகிர்ந்தளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பெரும்போக நெல்லறுவடையின் பின் தரிசாக விடப்படும் பயிர்ச்செய்கை நிலங்கள், பயிர்ச்செய்கை நிலங்கள் அற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

தற்போது நெல் அறுவடை முடிவுற்றதும் அனைத்து வயல் நிலங்களிலும் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்கள் ஏனைய விவசாயிகளுக்குத் தரகர் கொடுப்பனவுகளும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு மாதம் நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபா வருமானத்திலும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிறுத்தப்பட்ட இலவச உலர் உணவு நிவாரணம் மேலும் ஒரு மாதத்துக்குத் தொடரவேண்டும். அல்லாவிடில் ஒரு மாதத்துக்கு கடன் அடிப்படையில் வழங்குக என கோரிக்கை விடுத்த நல்லூர் ஓய்வூதியர் சங்கத்தினருடன் நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் அனுப்பும் பணம் ஓய்வூதியம் வழங்கப் போதாது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு பணமாக சம்பளத்தை வழங்கவென அனுப்பி வைக்கும் பணம் போதுமானதாக இல்லை. இந்நிலையில் ஓய்வூதியக் காரர்களுக்கு காலதாமதம் இன்றி கொடுப்பனவுகளை செலுத்துவது எமக்கு முடியாத காரியமாக உள்ளது.'

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. வன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கான ஓய்வூதியம் மற்றும் அரச ஊழியர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
வேலுப்பிள்ளை
அமிர்தலிங்கம்



தோற்றம்: 18 6 1925

மறைவு: 25-2-1990

எமது அன்புத் தந்தையே! எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோலக் காப்பாற்றி வளர்த்து, எம்மை ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும், உங்களை மீதான அன்பு பாசமும் எம்மைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

24. மகேந்திரா வீதி, (லைமன் வீதி,)
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


அன்புள்ள
பிள்ளைகள்.

(B/2003)

## நான்காண்டு நினைவு

தாயின் மடியில்:
22 - 01 - 1953

தமிழ் மண்ணில்:
14 – 02 - 1987



### வேலுப்பிள்ளை சிவனேந்திரன

(ரஞ்சன்)

தமிழீழ மண் மீட்பில்
தளராத மனத்தினால்
அமிழ்தான காரியம்
அரங்கேறும் வேளை
இமியேனும் எண்ணிடா
இடர்வந்த போதும்
நிமிர் நெஞ்சாய் வாழும்
நிந்தித் தமிழரின்
உயிர் மூச்சாய்த் திகழும்
உத்தம ரஞ்சன் எம் வீரா!

(B/2009)

உற்றார், உறவினர்கள்,

## வரி விளம்பரம்

### திரவ சவர்க்காரம்

வீட்டுச் சலவைக்குச் சக்தி மிக்க மின்னலைவற் திரவ சவர்க்காரம் Liquid Soap எனக் கெரிக்க சுத்தமான வேப்பெண்ணெய். யாழ்நகர் ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. மின்னலைவற்.

(B-2006)


### சமூகக்கல்வி

வெளிவருகின்றது! சமூகக்கல்வி - ஆண்டு: 11. (புதிய பாடத்திட்டம்). ஆசிரியர்: ந. தர்மபாலன். சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(R-1084)

## அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு
17
-
06
-
1952



இறப்பு
19
-
11
-
1990

### ரா. பரந்தாமன்

எம் இதய தீபமே!
நீங்கள் பிரிந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டதே!
ஓயவில்லை கண்ணீர் ஆறவில்லை மனம்
எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய்
வழி நடத்திய அன்புத்தந்தையே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

48 அரசடி றோட்,
5 ஆம் ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள், மருமகன்.

(R/1101)

## நினைவில் நிறைந்த நிலா

உதயம்
23
-
12
-
1956



அஸ்தமனம்
14
-
02
-
1987

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரும்
மத்திய குழு உறுப்பினருமாகிய

## இயக்குனர் சபைகள் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பநோ.கூ. சங்கங்களின் இயக்குனர் சபைகள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை அம் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் மேற்கொண்டு உள்ளார்.

அரசாங்கம் வழங்கும் உலர் உணவுப் பண்டங்களை விநியோகிப்பது மட்டும்தான் சங்கங்களின் வேலையல்ல பணம் கொடுத்துப் பண்டங்களைக் கொள்வனவு செய்து மக்களுக்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## காலை இழந்தார்

தமது வீட்டைப் பார்க்கச் சென்றவர் இராணுவத்தினர் புதைத்த மிதிவெடிக்குள் சிக்கி காலை இழந்தார்.

இச் சம்பவம் முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ். யோகேந்திரன் (வயது 32) என்பவருக்கு இடம்பெற்றது.

## நாலாவதாண்டு நினைவு




## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 14

1987 ஆம் ஆண்டு வைகுடியில் இராணுவ நடவடிக்கைக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருக்கையில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரமரணமடைந்த

லெப்-கேணல் பொன்னம்மான்
(யோ. குகன் - கலட்டி - யாழ்ப்பாணம்)
மேஜர் கேடில்ஸ் (மதிலீடன் - கண்டாவளை)

# நினைவில் நிறைந்த நிலா



உதயம் 23 - 12 - 1956

அஸ்தமனம் 14 - 02 - 1987

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரும்
மத்திய குழு உறுப்பினருமாகிய
லெப்டினன் கேணல்

## பொன்னம்மான் (அற்புதன்)

## செல்லப்பா யோகரத்தினம் குகன்

(யாழ். இந்துவின் பழைய மாணவன்)

என்னம்மான் பார்க்கின்றாய்! ஈழம் இன்னும் உலரவில்லை!
பொன்னம்மான் நீ சிந்திய குருதிவெள்ளம் இன்னும் உலரவில்லை!
அன்னைபூமி மீட்கவென்றே அன்னை உன்னை அனுப்பி விடவே
பொன்னைப் பொருளை நீக்கி நீயும் புயலெனக் கிளம்பி பத்தாண்டு காலம்
தானைத் தலைவன் பிரபாகரனின் புலிச்சேனைத் தளபதியாகி
வானைத் தொட்ட வீரம் திளைத்து வானாக சூழ்கின்றாய்!
பாசறையில் அற்புதனாய் படைக்கலப் பாசறையில் புலிகளைப் பயிற்றுவித்த
சேனாபதியாய்!

உடைத்தெறிந்து அடிமைத் தளையை உரிமைமீட்கப் போரிட்டாய்!
தம்பி உன்னை நம்ப நீயும் நாடு காக்கும் வேங்கையாகி
வசபர் கூட்டம் ஒழியவென்று கைதடியில் நாவற்குழி முகாம் அழிக்கச்சென்று
தம்பியோடு நீயும் விடுதலைப் பயிர்வளர தமிழீழத்துக்கு உரமானாய்!
நாடு மறவாக் குகனே! பல ஏடுகள் புகழும் உனையே!
நாடு சுதந்திரம் அடைவது நிஜமே! உன்பெரும் நிலைக்கும் தினமே!
மறைந்து ஆண்டு நான்கு ஆயினும் ஈழமண் மாதா நினைவினில்
நிறைந்து நீ வாழ்வாய்! மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்தாய்!

என்றும் உனைமறவா நன்றிநிறை நெஞ்சங்கள்
சகோதரர்கள், சகோதரி, மைத்துனி,
மைத்துனன், மக்கள், உற்றார், உறவினர்கள்.

(R 1103)

---

### சபைகள் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பநோ. கூ. சங்கங்களின் இயக்குனர் சபைகள் புனரமைக்கப்பட வுள்ளன. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை அ. மன்கூட்டுறவு ஆணையாளர் மேற்கொண்டு உள்ளார்.

அரசாங்கம் வழங்கும் உலர் உணவுப் பண்டங்களை விநியோகிப்பது மட்டும்தான் கூ. சங்கங்களின் வேலையல்ல பணம் கொடுத்துப் பண்டங்களைக் கொள்வனவு செய்து மக்களுக்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### காலை இழந்தார்

தமது வீட்டைப் பார்க்கச் சென்றவர் இராணுவத்தின மிதிவெடிக்குள் சிக்கி காலை இழந்தார்.

இச்சம்பவம் முல்லைத் தீவைச் சேர்ந்த எஸ். யோகேந்திரன் (வயது 32) என்பவருக்கு இடம் பெற்றது.

---

### நாலாவதாண்டு நினைவு



லெப்-கேணல்
பொன்னம்மான்
(அற்புதன்)
(செல்லப்பா, யோகரத்தினம் - குகன்)

தமிழ்
தாய்க்காக: மண்ணுக்காய்:
23-12-1956 14-02-1987

சதுரங்க விளையாட்டில்
சாதனைகள் படைத்தவனே!
எதிலுமுயர் யாழ் இந்துத்
-துடுப்பாட்ட
எழிற்றலைவ! எங்கள் மண்
சுதந்திரத்தில சதுரங்கம்; நீ!
சுழற்சுக் கருவி எதிர்கட்கு!
தளர்குண்டு பொழிந்தலும்
தமிழீழ மண் வாழும்
தமிழர்களின் நெஞ்சங்களே
-நின்
தாய் வீடாம் தமிழ் மறவ!

உற்றார், உறவினர்

(B-2008)

---

1952 1990

### ரா. பரந்தாமன்

எம் இதய தீபமே!
நீங்கள் பிரிந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டதே!
ஓயவில்லை கண்ணீர் ஆறவில்லை மனம்
எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய்
வழி நடத்திய அன்புத்தந்தையே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

48 அரசடி றோட், உங்கள் பிரிவால் வாடும்
5 ஆம் ஒழுங்கை அன்பு மனைவி, மக்கள், மருமகன்.
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(R/1101)

---

### நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 14

1987 ஆம் ஆண்டு கைதடியில் இராணுவ நடவடிக்கைக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் பொழுது எதிர்பாராமல் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரமரணமடைந்த

லெப்-கேணல் பொன்னம்மான் (யோ. குகன் - கலட்டி - யாழ்ப்பாணம்)
மேஜர் கேடில்ஸ் (ம. திலீபன் - கண்டாவளை)
கப்டன் வாசு (உ. சுதாகர் - வல்வெட்டித்துறை)
லெப்.சித்தார்த்தன் (வை. சசீதரன் - வவுனியா)
2ஆம் லெப்.பரண (கி. அர்ச்சுனன் - வல்வெட்டித்துறை)
யோகேஸ் (சு. தனபாலசிங்கம் - ஆழியவளை)
தேவன் (வசந்தகுமார் - மீசாலை)
குமணன் (மோ. கனகலிங்கம் - மட்டுவில்)
அக்பர் (அ. யோகநாதன் - மட்டுவில்)
கவர் (க. தருலேஸ்வரன் - வவுனியா)

இதே சம்பவத்தில் உயிரிழந்த பொதுமக்கள்,
இதே ஆண்டு வீரமரணமடைந்த
துரை (அ. மயில்வாகனம் - கிரான்)
இதே ஆண்டு மின்னியாவில் சிறிலங்கா
இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த
★ பறக்கும் புறா (சிவஞானம் - சேனையூர்)
1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினரின்
சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த
சுரேந்திரா (கு. றொபேட் கென்னடி - யாழ்ப்பாணம்)
1989 ஆம் ஆண்டு குமுழமுனையில் இந்திய
இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
கப்டன் மோகன் (சி. குணலிங்கம் - புதுக்குடியிருப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ பறக்கும் புறா என்னும் போராளி ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவர்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2005)

தலைவருக்கு முன்னாள் பிரதமமந்திரி ராஜீவ் காந்தி கடிதம் மூலம் பிரதமர் சந்திரசேகரைக் கேட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கையானது எதிர்காலத்தில் இந்திரா காங்கிரசின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பான கொள்கையின் வெளிப்பாடாகும் அதேநேரம் சந்திரசேகருக்குப் பதிலாக ஆட்சி அமைக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் இந்திரா காங்கிரசின் கொள்கையாக இது இருப்பதனால் எதிர்கால இந்தியாவின் கொள்கை இதுவெனவும் கொள்ளலாம்.

இந்தியா 1974இல் அணுப் பரிசோதனை செய்த போதிலும் அணுவை முடிவு சாதிக்கப் பயன்படுத்தப் போவதில்லை என தொடர்ச்சியாக அறிவித்து வந்தது. அதேவேளை அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்து வந்தது. இதிலிருந்து இந்தியாவின் அடிமனதில் அணு ஆயுத உற்பத்தி தொடர்பான எண்ணம் இருந்திருக்கின்றது என்பது மட்டுமே உண்மை. இந்தியா அணு ஆயுத உற்பத்திக்காக மொஸாட்டின் உதவியை நாடியதாகவும் சில தகவல்கள் உள்ளன. அதேவேளை சில மேற்குலக இராணுவ ஆய்வாளர்கள் இந்தியா அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவைப் பொறுத்து அதன் அணு ஆயுத உற்பத்தி எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்து சமுத்திரப் பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்குப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கின் ஆரம்பத்துடன் ஏற்பட்டதாகும். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியால் வகுக்கப்பட்டுக் கொள்கை தொடர்ந்து வந்த ராஜீவ் காந்தியினாலும் கடைப்பிடிக்கப்பட்டது. இதன் வெளிப்பாடே ரஷ்யாவிடம் இருந்து அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கியைப் பெற்று இந்திய கடற்படையில் இணைத்துக் கொண்டதும், பிரிட்டனிடம் இருந்து நவீன விமானம் தாங்கிக் கப்பலைப் பெற்றுக் கொண்டதுமாகும்.

அதேவேளை தனியாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் அமைப்பில் மட்டுமல்ல, வேறு கட்சிகளும் இந்தியா அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து அணுவல்லரசாக மாறவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தன. பாரதீய ஜனதாக் கட்சி கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே தாம் ஆட்சி அமைத்தால் இந்தியா அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடாக மாற்றப்படும் என வெளிப்படையாகவே தெரிவித்திருந்தது.

அதேவேளை இந்தியாவின் அணுவாயுத உற்பத்தித் திட்டம் இரண்டு அடிப்படை அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. ஒன்று இந்தியா பிராந்திய வல்லரசு என்ற நிலையை உறுதிப்படுத்த அது தேவையாக உள்ளது. அடுத்ததாக உலக அணு ஆயுத வல்லரசுகளின் சவால்களை எதிர்கொள்வதற்கும் தேவையாகவுள்ளது.

மேலும் இந்தியாவுடன் சர்ச்சைக்குள்ளாகும் பாகிஸ்தான் அணு ஆயுதத்தைத் தயாரித்துவிட்டது. அமெரிக்கா பொருளாதார இராணுவ உதவியை நிறுத்தினாலும் அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும் பாகிஸ்தான் அறிவித்துவிட்டது.

இந்நிலையில் சாட்டு ஒன்றை வைத்து இந்தியா அணு ஆயுத உற்பத்தியில் வெளிப்படையாகப் புகுந்து விடவேண்டும் என இந்திரா காங்கிரஸ் எண்ணுகின்றது. இதற்கு பிராந்திய வல்லரசாக வளர்ந்துவிட்ட ஈராக் மீதான அமெரிக்காவின் அணு ஆயுத அச்சுறுத்தலை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த இந்திராகாங்கிரஸ் எண்ணியுள்ளது.

ஆகையினால் ராஜீவ்காந்தி பிரதமர் சந்திரசேகரிடம் விடுத்துள்ள அணு ஆயுதம் தொடர்பான வேண்டுகோள் வளைகுடா யுத்தத்தால் ஏற்பட்ட உடன் நெருக்கடியோ, தேவையோ அல்ல. இந்தியாவின் அடிமனத்தில் முன்னரே இருந்த ஓர் எண்ணத்தின் வெளிப்பாடாகும். இது பிராந்திய வல்லரசு ஆதிக்கத்தின் நோக்கமாகும். ஆனால் இதனை இன்று பகிரங்கப்படுத்த அமெரிக்கா இந்தியாவிற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

---

பிரயோகித்து அதன் இறைமை மதிப்பிழந்தது. இதுபோதாதென்று இந்தியாவும் தான் கொள்வனவு செய்த கால் காஸ்ட்ரோ பேரழிவுத்தாக்க எமது மக்களைக் குறிபார்த்தது. சிறிலங்கா அரசும் தனது "சொந்தக் கண்டுபிடிப்பான" பரல்குண்டையும் எமது மக்கள் மீது அபிஷேகம் செய்தது.

இன்று இத்தனை ஆயுதவகைகளை எல்லாம் தாக்குப் பிடிக்கக்கூடியளவுக்கு விடுதலைப் புலிகள் வளர்ச்சியடைந்துள்ளனர். ஜொனி, அருள் 89, பசிலன் 2000.... இவ்வாறாக புலிகளின் ஆயுதங்கள் சிறிலங்காப் படைகளை எதிர்கொள்ளக்கூட பயன்படுத்தி வருகின்றன. புலிகளின் ஆயுத வளர்ச்சியில் அவர்களது சொந்தக் கண்டுபிடிப்பில் பெரும் வளர்ச்சிக்கு காரணமாயிருந்த போராளி மறைந்த லெப். கேணல் பொன்னம்மான் அவர்கள் தான். 1978ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டத்தினுள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட இப்போராளியின் முயற்சியும், ஊக்குவிப்பும் இன்று பல இராணுவத்துறை வல்லுநர்களை போராட்டத்திற்கு பெற்றுத்தந்துள்ளது. அந்தக்காலத்திலிருந்தே புலிகளின் சுய ஆயுத தயாரிப்பு முயற்சிகளுக்காக நாளாந்தம் 30 அல்ல 85 மைல்கள் சைக்கிளில் ஓடிக்கொண்டிருந்த போராளி இவர். சிறிலங்கா அரசின் உளவாளிகளின் கண்ணும், மூக்கும் மூலை முடுக்கெல்லாம் பரவி நிற்கையில் இப்பணி இலேசானதல்ல.

எனவே போராட்ட வளர்ச்சியை வரலாறு பற்றி சொல்லும் போது பொன்னம்மானின் பெயரை விட்டுவிட முடியாது.

போராட்ட களத்தில் தம்மை ஆகுதியாக்கவென்றே இளைய தலைமுறை வீட்டைப் பிரிந்து, நாட்டைநேசித்தது, போராட்டத்திற் குதிப்பாக 1983ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டுவரை பின்னையும், காளான்களாய் பல இயக்கங்கள் தோன்றின. 35க்கு மேல் இவற்றின் தொகை சென்றது. சாதிக்குச் சந்தி இயக்கங்கள் தோன்றின. ஒவ்வொரு இளைஞனும் தனக்கு எங்கு தொடர்பு கிடைத்ததோ அந்த இயக்கத்தினை எவ்வளவு விரைவாகப் போக முடியுமோ அவ்வளவு விரைவாகப் போக முயற்சித்தான், போனான். ஆனால் இவை எவையும் நிலைக்கமுடியாமற் போயின. காரணம் பலமான அத்திவாரமின்மையே. இதேவேளை எந்த வல்லரசையும் எதிர்த்து நிற்கக்கூடிய ஒரே இயக்கம் உருவானது. அதன் இலட்சியத்தில் போராளிகள் ஊறியிருந்தார்கள் என்றால் அதற்கும்

பயிற்சிக்கு வரும் போராளிகளுக்கு பொன்னம்மானின் முதற்பாடம். எனவே ஆரம்பத்திலிருந்த ஒழுக்கம், இலட்சியப் பற்று என்பன போராளிகளுக்கு ஊட்டப்படுகிறது. இதனால் உலகில் ஒழுக்கமான விடுதலை இராணுவம் என்று புலிகள் உலகிற்கு இனம் காட்டப்படுவதற்கு வித்திட்டவர் இவரே.



பொன்னம்மான்

கசப்பான அனுபவங்கள் உள்ளன. "சோசலிசத் தமிழீழத்தை நோக்கி" என்னும் நூலில் கூறப்பட்டது போல "தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து கொண்டால் வெற்றியின் பாதை புலனாகும்" என்பதே உண்மை. இன்று கண்ணிவெடி வைப்பதில் கைதேர்ந்தவர்கள் 'புலிகள்' என உலகப் பத்திரிகைகளும் செய்தி ஸ்தாபனங்களும் புகழ்மாலை சூடுகின்றன. ஆனால் புலிகளின் முதலாவது கண்ணிவெடித்தாக்குதல் கசப்பான அனுபவங்களையே தந்தது. பொன்னம்மான் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி எதிர்மாறான விளைவைக் கொடுக்கவே அதில் பங்குபற்றிய போராளிகள் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர். இல்லையேல் அன்றைய நிலையில் இயக்கத்தின் பலம் பாதியாகக் குறைந்திருக்கும்.

அதுபோலவே ஒரு கைக்குண்டு, ஜொனி போன்றவற்றை சோதிக்கும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. போராட்டத்தின் வளர்ச்சிப்

**விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினரும் மத்தியகுழு உறுப்பினருமான லெப் கேணல் பொன்னம்மானின் நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.**

போர்க்களத்திலும் தனது முத்திரையைப் பதித்த பொன்னம்மான் தவறவில்லை; பருத்தித்துறையில் பொலிஸார் மீதான தாக்குதல், உமையாள்புரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 83ஆம் ஆண்டின் திருநெல்வேலித் தாக்குதல் போன்ற பல தாக்குதல்கள் பொன்னம்மானின் திறமையை எடுத்துக் காட்டிய வரலாற்று நிகழ்வுகள்.

"போராட்ட வடிவம் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது." இது கருமவீரரான தலைவரின் பிரகடனத்தின் முக்கிய அம்சம். பொன்னம்மானும் இத்தகையவரே.

1982ஆம் ஆண்டு சென்னையில் தலைவர் கைதாகி சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது செய்தியறிந்த சிறிலங்கா அரசு அவசர அவசரமாக ஒரு பொலிஸ் குழுவை தமிழகத்துக்கு அனுப்பியது. இவரை தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டியது எதுவும் நடந்து விடலாமென்ற நேரம். "தலைவரை சிறிலங்கா அரசிடம் கையளிக்கக்கூடிய சூழ்நிலை உருவானால்"...... தோழர்கள் ஆராய்கின்றனர். அப்படியான ஒரு முடிவு எடுக்கப்படு

போக்கில் தவிர்க்க முடியாதவாறு இந்நிகழ்வுகள் இடம் பெற்று விடுகின்றன.

இன்று முகாம்கள் தாக்கப்படுகின்றன. கரும்புலிகள் வெடிமருந்துகள் நிரம்பிய வாகனங்களில் சென்று முகாம்களுக்குள் நுழைகின்றனர். சிறிலங்கா அரசு தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை படிப்படியாக இழந்து வருகிறது. வெடிமருந்து நிரம்பிய வாகனங்களை முகாம்களுக்குள் செலுத்துவதற்கான உத்தியை கையாள முயன்ற பொன்னம்மான் இன்று உயிரோடு இல்லை. எந்த இடத்தில் தவறு நிகழ்ந்தது என்பதை தெரியப்படுத்தவும்கூட நின்ற ஒருவருமே இல்லை. ஆனாலும் போராட்டம் தொடர்கிறது அவருடைய ஒழுங்கமைப்பில்.

---

## கடலுணவு விற்பனை

இறால் ஊறுகாய், பதனிடப்பட்ட உணவாய் ஆகிய தின்பண்டங்கள் இப்போது விற்பனையாகின்றன. தேவை ஏற்படும்போது உணவுடன் சேர்த்து ஊறுகாய் போல் இவற்றை உண்ணலாம்.

கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படாத கடல் உணவு வகைகளே இவ்வாறு தயாரிக்கப்படுகின்றன.

